இதுவரை ரூ.6 கோடியே 59 இலட்சத்து 90 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது!

2012 ஜூன் மாதம் முதல் உதவித் தொகை ரூ. 10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரமாகவும்

2013 ஆகஸ்ட் மாதத்திலிருந்து ரூ. 25 ஆயிரமாகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில்

நலிந்தோர் - மருத்துவம் உதவி நிதியாக

இன்று ரூ.2,00,000/- கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

கலைஞர் கருணாநிதி அறக்கட்டளைக்காக, தலைவர் கலைஞர் அவர்கள் தனது சொந்த பொறுப்பில் அளித்த ஐந்து கோடி ரூபாயினை வங்கியில் வைப்பு நிதியாக போடப்பட்டு, அதில் கிடைக்கப்பெறும் வட்டித் தொகையினைக் கொண்டு, மாதந்தோறும் ஏழை எளிய நலிந்தோர்க்கு உதவித் தொகையாக 2005 நவம்பர் மாதம் முதல் 2007 ஜனவரி மாதம் வரை வழங்கப்பட்டு வருகிறது.

வைப்பு நிதியாக போடப்பட்ட ஐந்து கோடி ரூபாயில், 30வது புத்தகக் கண்காட்சியினை 10.1.2007 அன்று திறந்து வைத்து தலைவர் கலைஞர் பேசுகையில், கலைஞர் கருணாநிதி அறக்கட்டளை சார்பில், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் – பதிப்பாளர் சங்கத்துக்கு ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும் என அறிவித்து அச்சங்கத்துக்கு வழங்கியது போக மீதமுள்ள நான்கு கோடி ரூபாயிலிருந்து வரும் வட்டித் தொகையில் 2007 பிப்ரவரி முதல் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது.

2005 நவம்பர் முதல் இதுவரை வழங்கிய நிதி **ரூ. 6 கோடியே 59 லட்சத்து 90 ஆயிரம்**. இந்த மாதம் நலிந்தோர் மற்றும் மருத்துவம் உதவி நிதியாக மொத்தம் **8** பேருக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் வீதம் மொத்தம் **ரூ.2,00,000/- (இரண்டு லட்சம்) 12-11-2026** அன்று கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** வழங்கினார். நிதி பெறுவோர் வெளி மாவட்டங்களிலிருந்து வந்துபோகிற செலவினத்தை தவிர்ப்பதற்காக தபால் மூலம் வரைவுக் காசோலையாக அனுப்பப்படுகிறது.

நிதி உதவி பெறுவோர் விவரம்

1.	கு. செல்லையா, மாயமான்குறிச்சி, ஆலங்குளம், தென்காசி மாவட்டம்.	25,000/–
2.	பொ.தங்கராஜ், முக்காணி, ஏரல், திருவைகுண்டம், தூத்துக்குடி மாவட்டம்.	25,000/–
3.	என்.சண்முகம், ஆஸ்ராமம், சுசீந்திரம் அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம்.	25,000/–
4.	கே.நிஷார், நெ.8, 4வது தெரு, ஆயிரம்விளக்கு, சென்னை – 6	25,000/–
5.	இருதயமேரி, சி.கே.எஸ்பிளாட், புதுத்தெரு, சாந்தோம், சென்னை – 4	25,000/–
6.	பி.வெங்கடேசன்,மேல்நல்லாத்தூர் அஞ்சல், கடம்பத்தூர், திருவள்ளூர் மாவட்டம்	25,000/–
7.	சௌ.ஆரோக்கியராசு, கஸ்தூரிபாய் நகர், அனகாபுத்தூர், சென்னை – 70.	25,000/–
8.	ஏ.இ.என்.நாகராஜ், வி.எம்.டி.என்கிளவ், கங்காபுரம், ஆம்பூர், திருப்பத்தூர்	25,000/–
	மொத்தம்	**ரூ.2,00,000/-**

முன்னாள் அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில்

மேற்கு மண்டல கழக இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டம்!

கழக இளைஞர் அணி மாநில துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ் எம்.பி. வேண்டுகோள்!



ஈரோடு, நவ. 14 - ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினரும், கழக இளைஞர் அணி துணைச் செயலாளருமான கே.இ.பிரகாஷ் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

வருகிற 20.11.2026 அன்று காலை 9.00 மணி அளவில் மேற்கு மண்டல (மண்டலம் 4, 5 மாவட்டம் ஈரோடுவடக்கு, ஈரோடுதெற்கு, நாமக்கல்கிழக்கு, நாமக்கல்மேற்கு கரூர், திருப்பூர்கிழக்கு, திருப்பூர்தெற்கு, திருப்பூர் மத்தியம், திருப்பூர்வடக்கு, கோவைதெற்கு, கோவை வடக்கு, கோவை மாநகர் மாவட்டம், நீலகிரி, கிருஷ்ணகிரி மேற்கு, கிருஷ்ணகிரிகிழக்கு, மாநகரம் : ஓசூர், திருப்பூர்தெற்கு, திருப்பூர்வடக்கு, ஈரோடு, கரூர், நாமக்கல் இளைஞர் அணி மாவட்ட, மாநகர அமைப்பாளர், துணை அமைப்பாளர் ஆலோசனை கூட்டம் முன்னாள் அமைச்சர் ஈரோடுதெற்கு மாவட்ட கழக செயலாளர் சு.முத்துசாமி தலைமையில் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் சீனிவாசன் எம்.எல்.ஏ., அப்துல்மலிக், பிரபுகஜேந்திரன், ஆனந்தகுமார் ஆகியோர் முன்னிலையில் மொடக்குறிச்சியில் அமைந்துள்ள இளைஞர் அணியின் மேற்கு மண்டல அலுவலகம் அன்பகம்உதயம் அரங்கில் நடைபெற உள்ளது அதுசமயம் மேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்ட மாநகர இளைஞர் அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் தவறாமல் வெண் சீருடைகள் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

பொருள்; 1) கழக இளைஞர் அணி செயலாளர் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 50 ஆவது பிறந்தநாள் விழா நலத்திட்ட பணிகள் குறித்து 2) வருகிற திணிக்கப்பட்ட சட்டமன்ற இடைத்தேர்தல் பணிகள் குறித்து 1. பெருந்துறை,2. கரூர் 3) சமூக வலைதள பணிகளுக்கு மாவட்டம் தோறும் ஆக்கபூர்வமாக செயல்படும் 50 இளைஞர்கள் தேர்ந்தெடுத்து நிர்வாகிகளாக நியமிப்பது தொடர்பாக

குறிப்பு: அனைவரும் தவறாமல் மினிட் நோட் எடுத்து வரவும் நன்றி

இவ்வாறு கே.இ. பிரகாஷ் எம்.பி. வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சேலம் மாவட்டம் முழுவதும்

த.வெ.க. ஆட்சியில் கஞ்சா, குட்கா விற்பனை அதிகரிப்பு!

கண்டுகொள்ளாத காவல்துறை!

சேலம், நவ.14 –

சேலம் மாவட்டம் முழுவதும் த.வெ.க. ஆட்சியில் கஞ்சா குட்கா போதை மாத்திரை விற்பது அதிகரிப்பு. சேலம் மாவட்டம் ஓமலூர் காமண்டபட்டி ரயில்வே பாலத்திற்கு கீழ் கல்லூரி மாணவர்களுக்கு கஞ்சா, விற்பனை செய்து வருவதாக போலீசாருக்கு தகவல் கிடைத்தது இதையொட்டி சப் இன்ஸ்பெக்டர் கணேஷ் குமார் மாறுவேடத்தில் அங்கு சென்றார் ஒரு வாலிபர் மாணவர்களுக்கு சிறிய பொட்டலங்களை விற்றுக் கொண்டிருந்தார். கணேஷ் குமார் அந்த வாலிபரிடம் சென்று தனக்கு ஒரு பொட்டலம் தேவையென்று கேட்டார் அந்த வாலிபர் ஒரு பொட்டலம் ரூ. 800 என்று கூறினார். உடனே அந்த வாலிபரை கஞ்சா பொட்டலத்துடன் பிடித்து விசாரனை செய்ததில் அதே பகுதியை சேர்ந்த பாரத் (வயது 25) என்று தெரிந்தது. இவருடைய வீட்டை சோதித்ததில் 50 க்கும் மேற்பட்ட கஞ்சா பொட்டலங்கள் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. இதையொட்டி கைது செய்யப்பட்டார்

அதே பகுதியில் முருகேசன் (வயது 54) என்பவர் வீட்டை சோதனை செய்ததில் மூட்டையில் குட்கா இருந்தது கண்டுபிடிக்கப் பட்டது அவரும் கைது செய்யப் பட்டார்.

சேலம் மாநகரம் பொன்னமாபேட்டை பகுதியில் போதை மாத்திரை விற்பணை செய்வதாக அம்மாபேட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர் சதீஷ் குமாருக்கு தகவல் கிடைத்தும் அவர் அந்த பகுதிக்கு சென்ற போது 4 பேர் சந்தேகப்படும் வகையில் நின்றிருந்த வர்களிடம் சோதனை செய்ததில் 4 பேரிடமும் 300 க்கும் மேற்பட்ட போதை மாத்திரைகள் பறிமுதல் செய்து விசாரித்ததில் ஜீவானந்தம், கிஷோர்குமார், முகமது சந்தோஷ் என்று தெரிய வந்தது. இதே போல சேலம் இரும்பாலை அருகே போலீசார் ரோந்து பணியில் இருந்த போது ஒரு வாலிபரை பிடித்து விசாரித்த போது போதை மாத்திரை 51 பிடிப் பட்டது.

அதே சமயம் போதை மருந்து சிரிஞ்ச் ஆகியவை கைப்பற்றி கைது செய்து விசாரித் தில் தீபக் சரண் (வயது 24) என்று தெரிய வந்தது. இவர்கள் அனைவரையும் கைது செய் தனர்.

ஆண்டியும் போண்டியும்



ஆண்டி : ஏன்ய்யா; வடகிழக்குப் பருவமழை பொய்த்து விட்டால், தமிழ்நாட்டில் தண்ணீர் பஞ்சம் தலைவிரித்தாட வாய்ப்பு உள்ளதாகக் கூறப்படுகிறதே. முன்னெச்சரிக்கையா த.வெ.க. அரசு நடவடிக்கை எடுக்குமா?

போண்டி : **ஆமாய்யா; தென்மேற்குப் பருவமழையாலே மூணில் ஒரு பங்குதான் தண்ணீர் இருக்குதாம். ஏற்கனவே கர்நாடகா தண்ணீர் தர முடியாதுன்னு சொல்லிடுச்சி. விஜய் கோயிலுக்கு போனபோது அப்படியே ஆந்திரா முதலமைச்சரிடம் பேசியதா தகவல். அவர்களாவது தருவாங்களான்னு தெரியலே. த.வெ.க. அரசு என்ன செய்யப்போதோ தெரியல. பார்ப்போம் என்ன நடக்குதுன்னு.**

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

அ.அ. ஜின்னா

நவம்பர் 14 (2022)



பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் உற்ற தம்பியாக, சிறந்த வழக்கறிஞராக விளங்கியவர்.

சென்னை சட்டக் கல்லூரி தமிழ் மன்றத் துணைத் தலைவராக இருந்தபோது, எதிரெதிர் துருவங்களான பேரறிஞர் அண்ணாவையும், மூதறிஞர் இராஜாஜியையும் ஒரே மேடையில் அமர வைத்து இந்தித் திணிப்பிற்கு எதிராகப் பேச வைத்தவர்.

கழகத் தலைவர் அவர்கள் , மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்ட போது, அவருடன் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

கழக மாநிலங்களவை உறுப்பினராகப் பணியாற்றி, கழகத்தின் குரலை நாடாளுமன்றத்தில் ஒலித்தவர்.

தமிழ்நாட்டிலேயே முதன்முதலாக பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலை வடித்து, அதனை சென்னை சட்டக் கல்லூரி வளாகத்தில் நிறுவியவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

ஊரான் வீட்டு நெய்யில்

விளம்பரம் தேடாதீர் 'டம்மி'!

தி.மு.க. ஐ.டி. விங் விமர்சனம்!



சென்னை, நவ. 14 - தி.மு.க. ஐ.டி.விங்கின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

ஸ்டிக்கர் வேணாம் என்று சொன்ன ரீல்ஸ் வாய் எங்கு போனது?

குழந்தைகளுக்குக் கொடுக்கும் கேக்கின் விலையை விட, 'டம்மி' மாமா விஜய்யின் விளம்பர வெறிக்கான செலவு அதிகமாக இருக்கும் போலிருக்கிறது. ஊரான் வீட்டு நெய்யில் விளம்பரம் தேடாதீர்கள். டம்மி!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டம் பவித்ரமாணிக்கம்

சோழா.எம்.நடராஜன் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி



திருவாரூர், நவ. 14 - திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரி ஒன்றியம் பவித்ரமாணிக்கம் சோழா.எம்.நடராஜன் அவர்கள் மறைவெய்தினர் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். சோழா. எம்.நடராஜன் அவர்களின் விருப்பப்படி அவரது உடலை மருத்துவக் கல்லூரிக்கு உறவினர்களும் கழகத்தினரும் தானமாக கொடுத்தனர்.

மண்ணின் மைந்தர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் மீதும், கழகத் தலைவர் தளபதி அவர்கள் மீதும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீதும் தீராப் பற்றும், அளவற்ற ஈடுபாடும் கொண்ட கழகத்தின் செயல்மறவர் சோழா.எம்.நடராஜன் அவர்கள், தலைமைக் கழக பேச்சாளராகவும், இலவங்கார்குடி கூட்டுறவு சங்கத் தலைவராகவும், கழக ஒன்றியப் பிரதிநிதி யாகவும் இருந்து கழக பணியாற்றியவர்.

அன்னாரது மறைவு தகவல் அறிந்த மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., ஒன்றிய செயலாளர் சேகர்.கலியபெருமாள், ஆர்.பாலச்சந்திரன் உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய,நகர , பேரூர் கழக நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் அன்னாரின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

பாபு ஜனார்த்தனன்

நவம்பர் 14 (1989)



பள்ளிப் பருவத்திலேயே திராவிடர் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றினார். பின்னர் தி.மு.க. ஆரம்பித்தவுடன் கழகத்தில் இணைந்து பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருடன் நெருக்கமாக பழகும் வாய்ப்பினை பெற்றவர்.

1978ஆம் ஆண்டு முதல் 1983ஆம் ஆண்டு வரை ஒன்றுபட்ட வடஆற்காடு மாவட்ட தி.மு.க. செயலாளராக பணியாற்றியவர்.

1980ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் செய்யாறு தொகுதியில் போட்டியிட்டு பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.